# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 48, கார்த்திகை 2011



## 'வாலிபன்' ஊழியங்களின் நான்கு ஆண்டுகள் நிறைவு





**அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?**

(சகரியா 4:10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

அன்பான 'வாலிபன்' வாசகர்களுக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

'வாலிபன்' சஞ்சிகை இவ்விதழோடு தனது நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்வது நீங்கள் அறிந்ததே! நான்கு ஆண்டுகளைக் கடக்கச் செய்த ஆண்டவரை நன்றியோடு துதிக்கின் றோம். இவ்வூழியத்தில் ஆண்டவர் செய்த அதிசயங்கள் ஆயிரம் ஆயிரம்!!!

இந்நான்கு ஆண்டுகள் நிறைவையொட்டி பின்வரும் நிகழ்வுகள் நடைபெறவிருக் கின் றன ;

**அ) நன்றி செலுத்தும் வழியாடு - 20.12.2011**
*கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம், காலை 7.30 மணி.*

**ஆ) அகில இலங்கை வேதாகமக் கட்டுரைப் போட்டி**
*போட்டி முடிவு – 10 டிசம்பர் 2011*

**இ) கிறிஸ்துவுக்காய் பாடுவேன் - 2011** ***(சிறார்களுக்கான பாடல் போட்டி)***
***10.12.2011***

**ஈ) திருச்சபைகளிடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டி**
***இறுதிப் போட்டிகள் 10.12.2011***

இந்நிகழ்வுகளுக்காய் ஜெபிப்பதுடன் இவற்றில் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், வன்னிவாழ் திருச்சபை மக்களுக்கு உதவுவதற்காக தங்களது உதவி களை நாடி நிற்கின்றோம். டிசம்பர் முதலாம் வாரத்தில் வன்னி நோக்கிய பிரயா ணம் ஆரம்பிக்கவிருக்கின்றது. பயன்படுத்தக்கூடிய நல்ல நிலையில் காணப்படும் ஆடைகள், சிறுவர்களுக்கான ஆடைகள், அப்பியாசக் கொப்பிகள், கிறிஸ்மஸ் பரிசில்கள் போன்றவற்றை வழங்குவதினூடாக வன்னியில் வாழும் குடும்பங்களையோ அல்லது சிறுபிள்ளைகளையோ மகிழ்விக்க ஏதுவாகும்.

மேலும், இம்மாதத்தில் 'அம்பாறை' பாஸ்டர்ஸ் ஐக்கியத்துடன் இணைந்து ஒருநாள் ஞாயிறு பாடசாலை சிறார்களுக்கான VBS ஒன்றினை கல்முனை சீயோன் ஆலயத்தில், 19ம் திகதி நடாத்தவுள்ளோம். இது ஒரு 'வாலிபன்' அனுசரணையில் நடாத்தப்படும் நிகழ்வென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், 19ம் திகதி மாலை சின்ன முகத்துவாரம் மெதடிஸ்த திருச்சபையில் மாலை நேர வாலிபர் ஒன்றுகூடலும் 20ம் திகதி திருக்கோவில் மெதடிஸ்த திருச்சபை யின் ஆராதனையையும் நடாத்தத் தயாராகி வருகின்றோம்.

அத்தோடு கோமாரி பிரதேசத்தில் அதேநாள் துண்டுப்பிரதி விநியோகிக்கும் (வீடுகள் தோறும்...) நிகழ்வும் மாலைநேரம் துறைநீலாவணை மெதடிஸ்த திருச்சபை யில் மாலைநேர 'துதியும் ஆராதனையும்', 4 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. இம் மாதத்தில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 5 நிகழ்வுகளுக்காக தமது தனிப்பட்ட, குடும்ப ஜெபங்களில் தாங்கவும்.

மேற்கூறப்பட்ட ஊழியங்களில் எவற்றிற்காவது ஆண்டவர் உதவி செய்யும்படி உங்கள் மனதில் ஏவினால் எங்களைத் தொடர்புகொள்ள அன்புடன் வேண்டிக்கொள் கின்றோம்.


கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிக்க,

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி செலுத்தும் வழிபாட்டு

## அழைப்பிதழ்



'வாலிபன் ஊழியத்தின்' 4 ஆண்டுகள்
நிறைவையொட்டி நடாத்தப்படும் நன்றி
செலுத்தும் வழிபாட்டுக்கு
அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
நேரம் : காலை 7.30 மணி
காலம் : 11.12.2011 ஞாயிற்றுக்கிழமை

'வாலிபன் ஊழியத்தின் அனைத்து வாசகர்களையும் ஆதரவாளர்களையும் அன்புடன் 'அழைக்கின்றோம்.

–'வாலிபன்' குடும்பத்தினர்.



# ஜோன் வெஸ்லி

கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....... 19

சகோ.இராஜநாயகம் சுரேந்திரன்

**'பீட்டர்** போலர்' வெஸ்லி ஐயரைப் பார்க்கிலும் வயதில் இளமையானவர். ஆனால் வயதில் குறைந்த பீட்டர் போலரிட மிருந்து ஞானத்தைக் கற்றுக்கொள்ள 'வெஸ்லி ஐயர்' எப்போதும் ஆயத்தமுள்ளவராகவே இருந்தார். தர்சு பட்டணத்தானாகிய சவு லுக்கு அனனியா எவ்வாறு உதவினாரோ அவ்வாறு, 'பீட்டர் போலர்' வெஸ்லி அவர்களுக்கு உதவினார்.

சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிற்பாடு நுரையீரல் வியாதி யினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு நண்பரைக் காணும்படி சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, பீட்டர் போலர் அந்த நண்பருடன் காணப்பட்டபடியினால் பேச வாய்ப்புக் கிடைத்தது. பலவித அழுத்தங்களினால் சோர்வுடன் காணப்பட்ட வெஸ்லி ஐயர் நான் பிரசங்கம் செய்வதை நிறுத்திவிடவா? எனக்கே விசுவாசமில்லாத நிலையில், நான் மற்றவர்களுக்கு எவ்வாறு பிரசங்கிக்க முடியும்?! என்று கேட்டார். அதற்கு பீட்டர் போலர் "வெஸ்லி, நீங்கள் பிரசங்கிப்பதை நிறுத்த வேண்டாம், நீங்கள் விசுவாசத்தின் இலக்கினை அடையும் வரைக்கும் விசுவாசத்தைப் பிரசங்கியுங்கள். பின்னர் உங்களுக்கு விசுவாசம் இருப்பதால், நீங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்வீர்கள்" என்று கூறினார்.

இந்த வார்த்தைகளின் நிமித்தம் வெஸ்லி ஐயர் தொடர்ந்து பிரசங்கிக்க முயற்சி செய்தார். மூன்றாவது தடவையாகவும் பீட்டர் போலரைச் சந்திக்க கர்த்தர் கிருபை செய்தார். ஜீவனுள்ள விசுவாசத்தின் கனிகளாகிய பரிசுத்தம், அன்பு இச்சையடக்கம், நற்குணம் ஆகியவற்றின் மேன்மைகளைக் குறித்து பீட்டர் போலர் எடுத்துரைத்தார். வெஸ்லி ஐயர் பலவிதமான காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தார். மனதினை ஒருமுகப்படுத்தியவராகத் தன்னை மாற்ற முயற்சித்தார். இதற்காகத் தனித்திருந்து தனது இருயத்தை ஊற்றி, கர்த்தரை விடாமல் பற்றிக்கொண்டு, இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதென்பது வெஸ்லி ஐயருக்கு எளிதான வேலையாக இருக்கவில்லை. ஆனால் அவர் தனித்திருந்து, ஓர் அமைதியான முறையில் கர்த்தரைத் தேடுவதற்கு முயற்சி செய்தார். கர்த்தர் ஓர் ஆழமான கிரியையை வெஸ்லி ஐயரின் இருதயத்தில் நிறைவேற்ற ஆரம்பித்தார். கர்த்தருடைய வார்த்தை வெஸ்லி ஐயரின் இருதயத்தில் ஒருவிதமான அனலை உண்டாக்க ஆரம்பித்தது. உண்மையான செபமானது அவரது ஆத்துமாவிலிருந்து பெருக்கெடுத்தது.

இதற்குப் பிற்பாடு பீட்டர் போலரிடமிருந்து வெஸ்லி ஐயருக்கு இறுதியான அறிவுரைகள் கிடைத்தன. விசுவாசத்தின் தன்மையையும், நாம் யாவரும் தேவனுடைய புத்திரர் என்று ஆவியானவர் பகரும் சாட்சியைக் குறித்தும் வெஸ்லி ஐயர் விளங்கிக் கொண்டார். ஆனால் ஒரு மனிதனுடைய இருதயம் உடனடியாக மாற்றப்படுமென்பதை அவரால் விளங்கிக்கொள்ளவோ அல்லது விசுவாசிக்கவோ முடியவில்லை. "மனம் திரும்புதல்" என்ற செயற்பாடு படிப்படியாகவே நடைபெற முடியுமென நம்பினார். இந்தக் காரியத்தை விளங்கிக்கொள்ளும்படி வேதாகமத்தை திறந்து ஆராய்ந்தார். குறிப்பாக அப்போஸ்தலர் நடபடிகளில் அவர் சிந்தை

(19ம் பக்கம் பார்க்க....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சம்பூரணமாய்க் கொடுக்கிறவர்

J.டெய்சி
கோட்டைமுனை.

நாம் ஆராதிக்கிற நம்முடைய ஜீவனுள்ள தேவன் நம்மை எப்போதும் நேசிக்கிறவராகவே இருக்கிறார். தாயின் வயிற்றில் தோன்றினது முதல் நம்மை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் நம்மைத் தாங்கி முதிர் வயது வரைக்கும் அப்படியே தாங்கி வருகிற தேவனவர். எப்போதும், எந்த நிலையிலும் நம்மை ஏந்தி, சுமந்து, தப்புவிக்க ஆவலோடு காத்துக்கொண்டிருக்கும் பரலோக தகப்பனவர். அப்படிப்பட்ட தேவன் அவருடைய பிள்ளைகளாகிய எமக்கு நிறைவான ஆசீர்வாதங்களைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?

நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். (I தீமே.6:17) ஒருவேளை நிலையற்ற ஐசுவரியமான இவ் உலகத்தின் ஐசுவரியத்தின் மேல் நாம் நம்பிக்கை வைத்திருக்கலாம். ஆனாலும் அந்த ஐசுவரியம் எவ்வளவு தூரம் எங்களது வாழ்வில் சந்தோஷத்தையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்கும் என்பதைத் திட்டமாகக் கூறமுடியாது. உலகம் எமக்குக் கொடுக்கும் சந்தோஷம் முடிவில் வேதனையையே கொண்டுவரும். ஆனால் "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" (நீதி.10:22) என வேதம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. ஏனென்றால் அவருடைய பிள்ளைகளாகிய எமக்கு குறைவானதையல்ல.... நிறைவானதையே தர தேவன் விரும்புகிறார்.

"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். (யோவா.16:24) இப்படி ஒரு அருமையான வார்த்தையை நமக்கு யாரால் கொடுக்க முடியும்? நம்முடைய ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணிவிட்டு நம்மை ஆசீர்வதிக்காமல் ஏமாற்றுகிறவர் அல்ல. நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கும் போது வாக்குத்தத்தம் பண்ணினவரான நமது உண்மையுள்ள தேவன் நமக்கு சம்பூரணமான ஆசீர்வாதங்களைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார். அவர் எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் (எபி.6:18) என தேவ வார்த்தை உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வீரன் ஒருவனுடைய வாழ்க்கையில் நடந்த உள்ளம் உருக்கும் சம்பவம் ஒன்றைப் பற்றி சிந்திப்போம்...

அவனுடைய வாழ்க்கையில் கடன் தொல்லை ஏராளம். ஒருநாள் தன் அலுவல் களை முடித்துவிட்டு இரவு தூங்கப் போகும்போது அவன் ஒரு காகிதத்தில் தான் கொடுக்க வேண்டிய கடன்களை எல்லாம் எழுதினான். அது ஒரு பெரும் தொகையாக வந்து அவ னைப் பயமுறுத்தியது. அவன் மிகவும் மனம் நொந்தவனாக 'இதையெல்லாம் கொடுத்துத் தீர்ப்பது யார்?' என்று அதனடியில் எழுதினான். பின்னர் அப்படியே மேசையில் உட் கார்ந்தவாறு தூக்கிவிட்டான். இராணுவ விதிப்படி அவன் விளக்கை அணைக்கவில்லை.

இரவில் அந்நாட்டு மன்னன், மாறுவேடத்தில் அங்கு வந்தார். எல்லாக் கூடாரங்க ளிலும் விளக்கு அணைக்கப்பட்டிருந்தது. இராணுவச் சட்டத்திற்கு மாறாக விளக்கு எரிவதன் காரணத்தை அறிய அவர் சத்தமின்றி அங்கு வந்தார். மேசையின் மேல் தலை வைத்து உறங்கும் வீரனைக் கவனித்தார். பிறகு அவன் எழுதி வைத்திருந்த கடன் கணக்குகளைப் பார்த்தார். அவர் உள்ளம் உருகிற்று. மேசை மீது இருந்த பேனாலவை எடுத்து அவன் எழுப்பியிருந்த கேள்விக்கு அடியில் அழகாக கையெழுத்திட்டு விட்டு வெளியேறிவிட்டார். காலையில் எழுந்து பார்த்த அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. தன்னுடைய கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு அந்த நாட்டு அரசனே முன்வந்துள்ளதை அறிந்த அவனுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு அளவேயில்லை. "என் கடனை எல்லாம் தேசத்தின் மன்னனே கொடுக்கப் போகிறார்... நான் எவ்வளவு பாக்கியசாலி" என்று அவன் குதித்தெழுந்து ஆடிப்பாடினான்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே! ஒரு தேசத்தின் அரசனே இவ்வளவு பெரிதான காரியத்தைச் செய்யக்கூடுமானால்... நமது பரலோக தகப்பன் வானத்தையும் பூமியையும் அரசாளுகிற ராஜாதி ராஜா வாகிய நம்முடைய தேவன் நம்முடைய வாழ்க்கையிலும் இந்த அரசன்செய்த காரியத்தை விட மேன்மையான, விலையேறப்பெற்ற, சம்பூரணமான ஆசீர்வாதங்களையும் ஈவுகளையும் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?

*'நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.* (யாக்.1:17) என்பதை உணர்ந்தவர்களாக தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தத்திற்காக, அவர் எங்களுக்காக வைத்திருக்கிற சம்பூரணமான ஆசீர்வாதங்களுக்காக அவருடைய பாதத்தில் காத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னை எதிர்பார்த்திருக்கிறேன்...!

செவ்வென்று சிவந்து எரிக்கும் வெயில் தணிகிறது
சில்லென்று பனிக்காற்று படர்கிறது
மரம் செடி கொடிகள் தலைதூக்கிறது
கார்த்திகைக் கொடியிலே நத்தார்ப் பூ பூக்கிறது

மண்ணில் விழுந்த மழை மண்குழைக்கிறது
நிலமோ செஞ்சேற்றை கொப்பளிக்கிறது
மாரி மலர்களில் குருவி தேன் தேடுறது
மரங்களில் தெங்கும் பனையும் தெம்மாங்கு பாடுறது

ஒழித்து வைத்த பச்சை கம்பளத்தை - பூமி
ஒய்யாரமாய் விரிக்கிறது
அடைத்து வைத்த நீரோடைகளை - நீர்
தாராளமாய் திறக்கிறது



தொகுப்பாய் இவையெல்லாம்
எனக்கு சொல்லும் கதையெல்லாம் - சேர்த்து
எடுப்பாய் வன்னியிலே எதிர்பார்த்திருக்கிறேன் - இயேசுவே
வன்னியிலும் உனை எதிர்பார்த்திருக்கிறேன்.

அருட்திரு.J.றிச்சட்
மல்லாவி மெதடிஸ்த திருச்சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமுறை மட்டும்...

உடல் கிழித்து, தசை பிழிந்து குருதி வடிகின்றதையா...
ஆணிகள் பாய்ச்ச, விலாவில் குத்த சிலுவையும் உள்ளது ஐயா...
தாகத்துக்கு காடி கொடுக்கும் பேடி கூட்டம் ஐயா - நாங்கள்
செய்நன்றி மறந்து போகும் புறத்து மக்கள் ஐயா...

முக்காலம் தெரிந்த பின்பும் தேடி வந்தீர் ஐயா - எம்
கறை நெஞ்சை உம் குருதியால் துடைத்தீர் ஐயா...
துடைபட்ட எம் உள்ளம் கறையானது - மீண்டும்
திறக்கப்பட்ட மனக்கண்கள் குருடானது....

மறுபடி பிறக்க மனமுண்டோ ஐயா - நீர்
கருவறையினுள் உற்பவிக்க வழியும் உண்டோ தூயா...
வெகு விரைவில் பரமிறங்கும் நாள் வருமே - அப்போது
நீர் அழைத்துச் செல்ல உம்மோடு சில துணை வேண்டாமோ...

A.Erie
மெதடிஸ்த திருச்சபை,
மோர் வீதி, வெள்ளவத்தை.

## கவிதைப்போட்டி - 32

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" - (சங்.23:1)**

இறுதித் திகதி 30.11.2011

## கவிதைப் போட்டி - 31ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"... ஆகையால் தூங்குகிற நீ விழித்து..." — (எரேமியா 5: 14)**



"இனியும் காலம் செல்லாது
மகிமையின் தேவன் வந்திடுவார்
தூங்கினது போதும் விழித்தெழு
கிறிஸ்துவின் ஒளியைப் பிரகாசித்திடு"

அனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 47

உருவாக்கம் : J.சேரா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | 1 | ■ | ■ | ■ | ■ | 2 |
| ■ | 3 | | 4 | ■ | 5 | 6 | |
| ■ | 7 | | | | | | |
| 8 | | ■ | | ■ | 9 | | |
| | ■ | 10 | | ■ | 11 | | |
| 12 | 13 | ■ | 14 | | ■ | 15 | |
| ■ | | ■ | | ■ | 16 | | |
| ■ | 17 | | | | | | ■ |

## இடமிருந்து வலம்

03. இது உள்ளவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல (குழம்பியுள்ளது).
05. அந்தந்த இது அதனதன் கனியினால் அறியப்படும் (குழம்பியுள்ளது)
07. இப்படிப்பட்ட மனுஷன் நான் என்கிறார் பவுல் (குழம்பியுள்ளது). (உதவி : ரோமர் 5-9 அதிகாரங்கள்).
08. "கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப ........ வயது போலாகிறது".
09. சத்துருக்களுக்கு முன்பாக தேவன் நமக்கு ஒரு இதை ஆயத்தமாக்குவார் (குழம்பியுள்ளது).
10. இதனையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்கிறார் தேவன் (திரும்பியுள்ளது).
11. நமது போராயுதங்கள் இதனை நிர்மூலமாக்கும்படி தேவபலமுள்ளவைகள்.
12. கிறிஸ்துவுக்கும் இதற்கும் உள்ள இரகசியம் பெரிதென்கிறார் பவுல்.
14. தேவ வாக்குத்தத்தங்கள் இயேசுவுக்குள் இப்படியும் ஆமென் என்றுமுள்ளது (திரும்பியுள்ளது).
15. பொல்லாதவர்கள் புல்லைப்போல் அறுப்புண்டு, பசும் பூண்டைப்போல் இப்படிப் போவார்கள்.
16. மோசேயை நதியில் விட்டபோது அவனுடைய இந்த முறையானவள் தூரத்தில் நின்று பார்த்தாள் (குழம்பியுள்ளதுடன் 3ஆம் எழுத்தில்லை).
17. உடன்படிக்கைப் பெட்டியின் கேருபீன்களின் முகங்கள் இதை நோக்கியிருக்க வேண்டும்.

## மேலிருந்து கீழ்

01. பவுல் சபைகளுக்கு அநேக இதனை எழுதினான். (குழம்பியுள்ளதுடன் கடைசி எழுத்தில்லை).
02. யூதருடைய பண்டிகையொன்று (முதல் எழுத்தில்லை)
03. இதினாலும் பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலே ஆகும் (குழம்பியுள்ளது).
04. உங்கள் இதினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறுகிறீர்கள்? என்றார் இயேசு பரிசேயரைப் பார்த்து (தலைகீழ், கடைசி 2 எழுத்துக்களும் இடம் மாறியுள்ளன).
05. இயேசு ஆதியும் இதுவுமாயிருக்கிறார் (தலைகீழ்).
06. யாக்கோபுக்கு விரோதமான இது இல்லை.
08. நானே ஆடுகளுக்கு இது என்றார் இயேசு (குழம்பியுள்ளது).
13. ஜீவனைப் பார்க்கிலும் உமது இது நல்லது என்கிறார் தாவீது (தலைகீழ்).
16. யோவான் இது திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தான் (கடைசி எழுத்தில்லை).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46 இற்கான விடைகள்

### இடமிருந்து வலம்

01) ம்தித்யச (சத்தியம்)
06) சதத் {சத்த(ம்)}
07) பர்னபா
08) ம்ந்அத (அந்தம்)
09) மாசா
10) ல்வமைல (வல்லமை)
11) நாயகர்
13) வாபோஸ் (போவாஸ்)
14) லநிம் (நிலம்)
15) சத்பிதல் (சபித்தல்)
17) லைவக (கவலை)

### மேலிருந்து கீழ்

01) ம்தந்சா (சாந்தம்)
02) தித்அ (அத்தி)
03) யப {பய(ம்)}
04) சர்வவர்லல்வ (சர்வவல்லவர்)
05) கபாஸ்லதம்ல (கபாலஸ்தலம்)
06) சம்மா
10) ல்க (கல்)
11) நாபோத்
12) யஸ்மி
13) வாசம்
16) தலை

குறுக்கெழுத்துப் போட்டி 46க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**செல்வி. Vஜோர்ஜியா**
மெதடிஸ்த தேவாலயம், பாணமபற்று, கோமாரி.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 47ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 30.11.2011**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப்போட்டி - 47**
**"வாலிபன்",**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்**
**மட்டக்களப்பு.**



## சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இலக்கம் - 39

1) நியாயப்பிரமாணம் யார் மூலமாய் கொடுக்கப்பட்டதென்று யோவான் கூறுகிறார்?

.................................................................................................

2) கிருபையும், சத்தியமும் யார் மூலமாய் உண்டானதென்று கூறுகிறார்?

.................................................................................................

3) யோவான்ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்த இடம் எது?

.................................................................................................

4) 'ரபீ' என்பதன் அர்த்தம் என்ன?

.................................................................................................

5) 'மேசியா' என்பதன் அர்த்தம் என்ன?

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி**
**38 இற்கான விடைகள்**

1) பொறுமையை
2) சோதனையை
3) பேசுகிறதற்கு
4) கேட்கிறதற்கு
5) கோபிக்கிறதற்கு

**பரிசு பெறுபவர்**

**மு.சுதாஜினி**
மெதடிஸ்த சிறுமியர் இல்லம்
பார் வீதி,
மட்டக்களப்பு.

- இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
- வினா விடைப்போட்டி 38இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **30.11.2011**

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
**வினாவிடைப் போட்டி - 39**
**'வாலிபன்' -**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# "கிறிஸ்துவுக்காய் பாடுவேன் - 2011"



# பாடல் போட்டி



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! வாலிபன் ஊழியத்தின் 4வது ஆண்டு நிறைவையொட்டி மாபெரும் பாடல் போட்டி **"கிறிஸ்துவுக்காய் பாடுவேன் - 2011"** இடம்பெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| வயதெல்லை | : | **16 வயதிற்கு கீழ்** |
| திகதி | : | **10.12.2011** |
| இடம் | : | **செல்வநாயகம் மண்டபம்,** கோட்டைமுனை, மட்டக்களப்பு. |

உங்கள் பெயர், விலாசம், சபை, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் போதகரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 30.11.2011 திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

1ம், 2ம், 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும், ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.




**கிறிஸ்துவுக்காய் பாடுவேன் - 2011,**
**இணைப்பாளர்,**
**'வாலிபன் ஊழியங்கள்'**
**மெதடிஸ்த திருச்சபை, கோட்டைமுனை. மட்டக்களப்பு.**



**கிறிஸ்துவுக்காய் பாடுவோம் வாருங்கள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 141வது ஆண்டின் நிறைவைக் காணும் கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்

“ஆசியா மேசியாவுக்குச் சொந்தமாக வேண்டும்” என்ற உயரிய எண்ணத்தோடு ஐரோப்பாவிலிருந்து ஆசியா நோக்கிப் பயணித்த மெதடிஸ்த மிஷனரிகளில் இளம் குருவான **வண.வில்லியம் ஓல்ட்** மட்டக்களப்பை வந்தடைந்து தமிழைக் கற்று தமிழில் அருளுரையாற்றி ஆன்மீகத்தில் மக்களை வளர்த்து மக்களின் இருளகற்றும் கல்விப் பணியினையும் இம்மண்ணில் ஆரம்பித்தார். இதன் வழியாக மெதடிஸ்தம் மட்டக்களப்பில் விதைக்கப்பட்டது. இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட மட்டுநகர் பணியானது 1820 வரை திருமலையிலிருந்து கண்காணிக்கப்பட்டு வந்தது.

1838ம் ஆண்டு சித்திரை மாதம் 5ம் திகதி மட்டக்களப்பு நகரின் கோட்டைமுனையில் ஒரு தமிழ் பாடசாலை நிறுவப்பட்டதாக வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. அக்காலத்தில் அமிர்தகழியில் துறைமுகம் புழக்கத்திலிருந்ததால் அமிர்தகழியை மையமாக வைத்து கருவேப்பங்கேணி, கூழாவடி, கோட்டைமுனை போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்கள் திருப்பணியாளர்கள் மூலம் சந்திக்கப்பட்டு வகுப்புக் குழுக்கள் மூலம் திருப்பணி முன்னெடுக்கப்பட்டது. ஆயினும் ஆலயம் என்ற ரீதியில் 1870ல் பாடசாலையுடனான கோட்டைமுனை ஜெப ஆலயம் கட்டப்பட்டது.

இவ்வாறாக வளர்ச்சியடைந்த திருச்சபையானது 1929ல் ஆரம்பிக்கப்பட்டு 1930ல் கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்பட்டது. 1924ல் அருட்திரு.T.S.வேதநாயகம் அவர்கள் முகாமைக் குருவாக நியமிக்கப்பட்டதாகவும், கோட்டைமுனை ஆலயமும் குருமனையும் திறக்கப்பட்டபோது அருட்திரு.R.A.உவின்ஸ்லோ அவர்கள் முகாமைக் குருவாக இருந்ததாகவும் வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

1930ல் திறக்கப்பட்ட புதிய ஆலயம் காலத் தேவைக்கேற்ப அவ்வப்போது மாற்றங்களை அடைந்து வந்தது. 1973 சித்திரை மாதம் 1ம் திகதியிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைமுனைத் திருச்சபையானது மட்டக்களப்பு புளியந்தீவு சேகரத்திலிருந்து மட்டக்களப்பு கோட்டைமுனை எனும் புதிய சேகரத்திலுள்ள நான்கு திருச்சபைகளில் ஒரு திருச்சபையாக பரிணாமம் பெற்றது.

1983ல் முதன் முதல் பெண் குருத்துவத்தை ஏற்றுக்கொண்டதால் அருட்செல்வி.மலர் சின்னையா அவர்கள் இங்கு பணியாற்றினார். இக்காலப் பகுதியில் சிறையிலிடப்பட்ட பல தமிழ் வாலிபர்களை சிறையிலிருந்து மீட்க கிறிஸ்துவின் அன்பினால் உந்தப்பட்டவராய் இவர் பாடுபட்டார்.

1983ற்குப் பின்னர் இவ்வாலயத்தில் வழிபடவந்த மக்களின் தொகை அதிகரிக்க ஆரம்பித்ததால் கோட்டைமுனை ஆலயத்தை பெரிதுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 1988ல் ஆலய புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1991ல் இறைவனின் பெரிதான கிருபையினால் இன்றைய ஆலயம் உருப்பெற்றது. இவ்வாலயம் 1993ல் பிரதிஷ்டை செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கோட்டைமுனை திருச்சபையானது அதன் ஆரம்ப காலந்தொட்டு சமுதாயப் பணியிலும் அதன் வாயிலாக நற்செய்திப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கமைய சின்ன ஊறணி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட சமுதாயப் பணி வாயிலாக அக்கிராம மக்களுக்கு கிறிஸ்து எனும் நற்செய்தி அறிவிக்கப்பட்டு இன்று இச் சேகரத்தில் ஒரு திருச்சபையாக வளர்ச்சி கண்டு அம்மக்கள் மத்தியில் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இன்றும் மக்கள் மத்தியில் இத்திருச்சபையானது சிறுமியர் இல்லம், பாலர் பாடசாலை போன்ற சமுதாயப் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றது. கடந்த ஒவ்வொரு வருடங்களிலும், உயிர்வாழும் நமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் வழிகாட்டுதல் எமது திருச்சபையில் ஒவ்வொரு வளர்ச்சியிலும் இடம்பெற்றிருக்கிறது. எதிர்காலத்திலும் நற்செய்திப் பணியிலும் சமுதாயப் பணியிலும் சிறப்பாக செயற்பட்டு கிறிஸ் துவை மற்றவர்களுக்கு வெளிக்காண்பிக்கும் திருச்சபையாகத் திகழ ஆண்டவர் இயேசு துணைநிற்க வேண்டுமென வேண்டுதல் செய்வோம்.

141ம் வருட விழாவின் போது மூன்று விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க அழைக்கப்படுகின்றோம். வரலாறு என்பது மனித வாழ்வின் மிக முக்கிய ஒழுகலாறு ஆகும். வரலாறுக்கு வலு சேர்ப்பது வாழ்வின் வலிகளாகும். எகிப்தில் ஏற்படுத்தப்பட்ட வலிகளின் கூக்குரலுக்கு இறைவனிடம் மீட்பும் விடுதலையும் கிடைக்கப்பெற்றன. அவ்வகையில் முதலாவதாக 1973.04.01 முதல் கோட்டைமுனை மட்டக்களப்பு புளியந்தீவு சேகரத்திலிருந்து மட்டக்களப்பு - கோட்டைமுனை சேகரமாக தன்னிறைவைப் பெற்றுக்கொண்ட காலப்பகுதியில் "சேகுவேரா" JVP கிளர்ச்சி ஏற்பட்டு படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததால் சிங்கள இளைஞர் ஆயுதமேந்தி போராட முற்பட்டனர். இந்நிலையில் மட்டக்களப்பிலுள்ள இளைஞர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு தொழிலுக்காக அலைந்துதிரிந்தபோது அவர்களுக்கான தொழில் கல்வியை வழங்கும் நோக்கில் கிழக்கிலங்கை தொழினுட்பக் கல்லூரியை (ETI) அமரர் Dr.R.செல்லையா அவர்களின் முனைப்புடன் கோட்டைமுனை சேகர முகாமைக்குருவான Missionary தூதுப்பணியாளராக Rev.John Kennedy, (இங்கிலாந்து திருச்சபையினின்று பணி செய்தவர்) இவர் தொழினுட்பவியலாளராக இருந்தமையால் கோட்டைமுனை சபையின் காணியில் இந் நிறுவகம் தாபிக்கப்பட்டு இற்றைக்கு பல ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் பெற உதவியது.

இரண்டாவதாக, 1978.11.23ல் வீசிய கடும் சூறாவளி (Cyclone) மக்கள் மனதில் ஆன்மீக தேடல் பெறக் காரணமாயிற்று. அக்காலத்தில் சேகர முகாமைக்குருவாக பணியாற்றிய வண.K.S.வேதநாயகம் போதகர் வழியாக Dr.N.N.வின்சன்ற் அவர்களின் அனுசரணையில் கோட்டைமுனை ஆலய திறந்த வெளியரங்கில் நற்செய்தி வெளிக்காற்றுப் பாடல்கள் தென்னிந்திய நற்செய்தியாளர்களைக் கொண்டு நடத்தப்பட்டன. இன்று மட்டக்களப்பு பிரதேசமெங்கும் காணப்படும் ஆன்மீக அலைக்கான அடித்தளம் கோட்டைமுனை சபை அன்று முன்னெடுத்த துணிவான விடயமாகும். அன்றைய திருமாவட்ட அவை இச்செயலைக் கண்டித்திருந்தும் கூட துணிச்சலோடு இதனை வெற்றிகரமாக நடத்த இறைவன் அருள்பாலித்தார்.

மூன்றாவதாக, 1983 ஜூலை கலவரத்தின் பின் வடக்கு - கிழக்கில் தமிழ் இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் கோட்டைமுனையில் பணியாற்றிய அருட்செல்வி.மலர் சின்னையா முதல் பெண் குருவானர் துணிந்து சென்று தடுப்புக் காவலிலிருந்த வாலிபர்களை மீட்க உதவினார். திருப்பேரவை, திருமாவட்ட அவை என்பன அநீதிக்காக குரல்கொடுக்கத் தயங்கிய வேளையிலும் மலர் சின்னையா போதகரம்மா துணிகரமாக அக்கால மக்களின் உயிர்காப்புச் சேவையை வழங்கியிருந்தமை கோட்டைமுனை சபை நன்றியோடு நினைவுகூர வேண்டியதாகும்.

இத்தகைய வலிகள், சோதனைகள் கோட்டைமுன்ன சபையை மாத்திரமன்றி முழு வடக்கு கிழக்கில் பெரும் தாக்கத்தைக் கொண்டுவந்தது போன்று எதிர்காலத்திலும் சிறப்பான வரலாறு படைக்க வரலாற்றின் தேவனே அருள்கூருவாராக. ஆமென்.

அருள்திரு.**V.சிறிபாலராஜ்** (விசிறி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருந்தின் ஊடாக வெளிப்படும் மகிமை



எமது திருச்சபை வாழ்வில் திருவிருந்து பிரதானமான ஒரு இடத்தை எடுக்கின்றது. அருட்கொடைகளுள் ஆண்டவர் இயேசுவினால் உருவாக்கப்பட்ட ஓர் உன்னத கொடையாக திருவிருந்தை நாம் கருதலாம். திருமறையில் திருவிருந்தின் மேன்மையைக் குறித்தும் அதன் ஊடாக வெளிப்படும் சவால்களைக் குறித்தும் இங்கு ஆராய்வோம்.

ஆண்டவர் இயேசு மரிப்பதற்கு முன்னர் ஏற்படுத்திய திருவிருந்தில் தம்முடைய உடலையும் உதிரத்தையும் மற்றவர்களின் நன்மைக்காகக் கொடுப்பதாகக் கூறுகின்றார். (லூக்கா 22:14-20). எனவே, திருவிருந்தைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வை, சிந்தனைகளை, மனப்பாங்குகளை மற்றவர்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவது மிக அவசியமாகின்றது.

ஆதித்திருச்சபையில் திருவிருந்து ஓர் ஐக்கியத்தைப் பேணும் அடையாளமாகவும் பகிர்ந்து வாழும் பண்பை உணர்த்தி நிற்பதாகவும் காணப்படுகின்றது. (திருத் 2:42-47). இவ் அடையாளச் சின்னம் இன்றைய திருச்சபைக்கு மிகவும் பொருத்தமானதாகும். திருவிருந்தின் ஊடாக ஐக்கியம், பகிர்வு போன்றவை எமது வாழ்வில் மலரும்போது அதன் ஊடாக பிறர் இயேசுவைக் கண்டுகொள்வதற்கு உதவியாக அமையும் (திருத் 2:47). எனவே திருவிருந்து ஓர் நற்செய்தியைப் பரப்பும் ஊடகமாக காணப்படுகின்றது.

ஆண்டவர் இயேசு எம்மாவூருக்கு சென்றுகொண்டிருந்த சீடர்கள் மத்தியில் அப்பத்தைப் பிட்டு சீடர்களுக்கு கொடுத்த வேளையில் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு இயேசுவைக் கண்டார்கள் (லூக்கா 24:30). எனவே திருவிருந்தின் ஊடாக சீடர்கள் இயேசுவைக் கண்டார்கள். அதேவகையில் திருவிருந்துப் பந்தி நாம் இயேசுவின் ஆவிக்குரிய பிரசன்னத்தைக் கண்டு கொள்ளவும் அனுபவிக்கவும் வழி வகுக்கின்றது.

திருவிருந்து என்னும் அருட்கொடை, வார்த்தை என்னும் அருட்கொடையுடன் இணைந்து பயணம் செய்கின்றது. வார்த்தையாகிய இயேசு திருவிருந்தின் ஊடாகவும் அருள் உரை ஊடாகவும் மனிதனை வந்தடைகின்றார் (திரு.பணி 20:7). பவுல் வார்த்தையை அறிவித்து அப்பத்தைப் பிட்டுக் கொண்டதன் ஊடாக வார்த்தையாகிய இயேசுவை மக்களுக்கு அறிவிக்கின்றார். வார்த்தையும் திருவிருந்தும் இணைந்து செயற்படுவதன் ஊடாக விடுதலை ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே திருவிருந்து மனிதனை விடுவிக்கும் ஓர் சாதனமாகும்.

திருவிருந்து மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் சாதனமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக பரி.பவுல் உரோமபுரிக்கு பிரயாணம் பண்ணிக்கொண் டிருக்கும் சந்தர்ப்பத்தில் கடலில் ஏற்பட்ட புயல் காற்றினால் மாலுமிகளும் பிரயாணிகளும் நம்பிக்கை இழந்தனர். அப்பொழுது பவுல் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அப்பத்தை எடுத்துப் பிட்டு அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுகின்றார் (திரு.பணி 27:35). இதன் ஊடாக நம்பிக்கையற்ற மக்களுக்கு நம்பிக்கை அருளும் சாதனமாக திருவிருந்து காணப்படுகின்றது.

எனவே, மற்றவர்களுக்கு நன்மை செய்யுமாறு எம்மைத் தூண்டுகின்றதும் நற்செய்தியின் ஊடகமாகவும் பிறருக்கு விடுதலை, நம்பிக்கை போன்றவற்றை வழங்கும் சாதனமாகவும் திகழ்கின்ற திருவிருந்தை வாழ்வில் அனுபவிக்க மன்றாடுவோமாக!

**அருட்பணி.அருளம்பலம் ஸ்ரீபன்**
இலங்கை இறையியல் கல்லூரி,
பிலிமத்தலாவை.

## நல்ல தூதர்களுக்கான பெயர்கள்

1) **தூதர்** - ஆதி. 19:1, 2 சாமு 24:16-17, 1 ராஜா 13:18, 1 நாளா 21:15, 2 நாளா 32:21, சங் 148:2, தானி 6:22, ஓசி 12:4, சகரி 4:1, மத் 22:30, மாற் 13:27, லூக் 22:43, லூக் 24:23, 1 கொரி 6:3, எபி 12:22, வெளி 7:11.
2) **தேவ தூதர்கள்** - ஆதி 28:12, ஆதி 32:1, 1 சாமு 29:9, 2 சாமு 19:27, அப் 10:3, கலா 4:14
3) **ஒளியின் தூதர்** - 2 கொரி 11:14
4) **கர்த்தரின் தூதர்** - 2 சாமு 24:16, 1 நாளா 21 : 16-18, மத் 28:2, லூக் 1:11, 2:9, அப்போஸ்.5:19, 8:26, 12:7-11
5) **பிரதான தூதர்** - 1 தெச 4:16, யூதா 9
6) **கேருபீன்** - ஆதி 3:24, சங் 18:10, 99:1, எசே 10:1-19
7) **பிரதான அதிபதி** - தானி 10:13
8) **பெரிய அதிபதி** - தானி 12:1
9) **பரம சேனை** - 2 நாளா 18:18, லூக் 2:13
10) **பலவான்களின் புத்திரர்** - சங் 29:1, 89:6
11) **பரிசுத்தவான் (கள்)** - யோபு 5:1, சங் 89:7, தானி 4:13,17, சங் 8:13
12) **பரிசுத்த காவலன்** - தானி 4:13,17
13) **ஜீவன்கள்** (இவை தேவதூதரை விட வேறுபட்ட வேறு தனிப்படைப்புக்கள் எனக் கருதுவோர் உண்டு) - எசேக் 1:2-24, 10:20-22, வெளி 4:6-9, 5:14, 6:1-8, 15:7
14) **புருஷர்** - ஆதி 18:2, 16, 19:1-17, தானி 10:5, 12:5-7, சகரி 1:9, 6:4
15) **பணிவிடை ஆவிகள்** - எபி 1:14
16) **விடியல் நட்சத்திரங்கள்** - யோபு 38:7
17) **வான சேனைகள்** - நெகே 9:6
18) **அதிபதி** - தானி 10:21
19) **சேராபீன்** - ஏசா 6:1-7
20) **பணிவிடைக்காரர்** - யோபு 4:8
21) **தேவ புத்திரர்** - யோபு 1:6, 2:1
22) **ஆவி** - யோபு 4:15-17

**சகோ.இரா.சஜாந்தன்**
நன்றி :
இணைவசன வேதாகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரை அனுமதி...



ஆண்டவர் ஒவ்வொருவரையும் படைத்ததில் குறிப்பிட்ட திட்டம் மற்றும் நோக்கம் இருக்கிறது. வேறு யாரும் நிறைவேற்ற முடியாத பெரும் திட்டத்தை அவர் உங்களுக்காக வைத்திருக்கிறார்.

"நான் உங்கள் பேரில் நினைத் திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல. சமாதானத் துக்கேதுவான நினைவுகளே" (எரே மியா 29:11) என வேதம் கூறுகிறது.

நீங்கள் யார் அல்லது எந்த இடத் தைச் சேர்ந்தவர்கள் என்பது பிரச்சினை அல்ல. கலாசாரம் அல்லது இனம் போன்ற வேறுபாடுகள் எதையும் பாரா மல் எல்லா மனிதர்களுக்கும் ஆண்ட வர் தெளிவான ஒரு நோக்கத்தை வைத் திருக்கிறார். நீங்கள் குறிப்பிட்ட நோக்கத் திற்கென்றே பிறந்துள்ளீர்கள்.

பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க பதி னொரு அடி உயரமுள்ள ஒரு பிரமாண்ட மான சிலையை ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான வேலை நடந்துகொண்டிருந்தது. மிகப் பெரிய பழு தூக்கிகளோடு அநேக வேலையாட் களும் அப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அதிக கவனத்தோடும், சிரமத்தோடும் அச் சிலையை தூக்கிச்சென்ற அவர்கள், அதை புதிய இடத்தில் வைப்பதற்காக கீழே இறக்கிக்கொண்டிருந்தனர். அப் போது களிமண்ணாலாகிய அச்சிலை சிறுசிறு துண்டுகளாக உடைந்து கீழே விழ ஆரம்பித்து. பணியாளர்கள் பதற்ற மடைந்தனர். ஆனாலும் மிக மெது வாக அதை தரைநோக்கி இறக்கி னர். அப்போது ஓர் உண்மை தெரிய வந் தது. அது ஆச்சரியத்திற்குரிய உண்மை!

அந்த உண்மை என்ன தெரி யுமா? அந்த முழு சிலையுமே விலை யேறப்பெற்ற தங்கத்தினால் செய்யப் பட்டிருந்தது என்பதுதான். அதன் மதிப்பு பலகோடி பெறும்.

அதுபோலவே இதுவரை வெளிப் படாத விலையேறப்பெற்ற ஒன்று உங் களுக்குள் மறைந்திருக்கலாம். ஆகவே, உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் செயல்பட அனுமதியுங்கள். அப்போது அவர் மறைந்திருக்கும் அந்த சிறந்த குணத்தை திறமையை வெளிப்படச் செய்வார். அவருக்கென பிரகாசிக்கும் நட்சத்திரமாக உங்களை மாற்றுவார்.


**சகோதரி தி.துஷ்யந்தி**
அமிர்தகழி மெதடிஸ்த திருச்சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் 141வது ஆண்டு விழா

கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் 141வது ஆண்டு நிறைவு விழா ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் பெரிதான கிருபை யினால் கடந்த நவம்பர் மாதம் 4,5,6ம் திகதிகளில் 'கிறிஸ்தவ சீடத்துவம்' என்ற கருப்பொருளில் இடம்பெற்றது.



இந்நிகழ்வுகளில் சிறப்பு விருந்தின ராக எமது அகில இலங்கை மெதடிஸ்த சபா சங்கத்தின் உபதலைவர் திரு.சிந்தக வர்ணகுலசூரிய அவர்கள் கலந்துகொண் டார்கள். இவருடன் இறை செய்தியை பகிர்ந்துகொள்வதற்காக மூதூர் வாகரை சேகர முகாமைக்குரு அருட்திரு. சுஜிதர் சிவநாயகம் அவர்களும், சென்னை இயேசு நம்மோடு மிஷனரி ஊழியங்க ளின் போதகரான அருட்திரு .செற்றிக் பெனோ அவர்களும், அருட்திரு ரவிசங்கர் நைல்ஸ் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித் தார்கள்.




4ந் திகதி மாலை நன்றி செலுத் தும் வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வில் 'கிறிஸ்தவ சீடத்துவம்' என்ற கருப்பொருளில் முதலாவது வேதப் படிப்பினை அருட்திரு. செற்றிக் பெனோ அவர்களும், 5ந் திகதி சனிக்கிழமை காலை ஆராதனையில் 2ம், 3ம் வேதப் படிப்புக்களை அருட்திரு சுஜிதர் சிவநாயகம் அவர்க ளும், 6ந் திகதி காலை எமது மெத டிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாவட்ட தலைவர் அருட்திரு S.D.தயாசீலன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற திடப்படுத்தல் ஞாயிறு வழிபாட்டில் அருட்திரு. ரவிசங்கர் நைல்ஸ் அவர்கள் 4ம் வேதப்படிப்பினையும் நடாத்தினார்கள்.



இந்தப் புதிய 142வது வருடத்திலும் கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் பணிகள் சிறக்கவும், வளரவும், தேவனின் நாமத்தை மகிமைப்படுத்தவும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் **'வாலிபன்'** குடும்பத்தினர் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்.

- ஜொந்தன் -

**(ஜோன் வெஸ்லி தொடர்ச்சி...)**

சென்றது. ஆவிக்குரிய மறுபிறப்பை அடைவதற்கு முன்னர், மூன்று நாட்களாக, வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்த பரிசுத்த பவுலைத்தவிர, மற்றவர்கள் அனைவரும் உடனுக்குடன் இரட்சிக்கப்பட்டிருந்தனர் என்பதை அறிந்துகொண்ட வெஸ்லி ஆச்சரியமடைந்தார். "கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்ப ஆண்டுகளிலிருந்து, தற்போதுள்ள ஆண்டுகள், காலங்கள் மாறுபட்டவை" என்ற எண்ணத்தின் மூலம், பிசாசானவன் அவரது பாதைக்குத் தடைபோட முயன்றான்.

இத்தடையை வெஸ்லி ஐயரின் இருதயத்திலிருந்து அகற்றிவிடுவது, பீட்டர் போலருக்கு கடினமான செயலாகக் காணப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தாங்கள் இரட்சிக்கப்பட்டதைக் குறித்துக் கூறக்கூடிய அநேக உயிருள்ள சாட்சிகளை அவர் வெஸ்லி ஐயரிடம் அழைத்து வந்தார். ஒரு நிமிடத்தில் தனது குமாரனுடைய இரத்தத்தின் மீது, தேவன் தங்களுக்கு எப்படியான நம்பிக்கையைக் கொடுத்தார் என்பதைக் குறித்தும் அந்நம்பிக்கையானது தங்களை இருளிலிருந்து ஒளிக்கும், பாவத்திலிருந்தும், பயத்திலிருந்தும், பரிசுத்தத்திற்கும் சந்தோஷத்திற்கும் எவ்வாறு உடனே கொண்டுவந்தது என்பதைக் குறித்தும் அவர்கள் சாட்சி பகர்ந்தனர். இத்தகைய சத்தியங்கள் அனைத்தையும் வெஸ்லி ஐயர் தெளிவாக விளங்கிக்கொண்டார். அதைக் குறித்து ஆழமாகவும் பிரசங்கிக்க ஆரம்பித்தார். தேவ நாமம் கொஞ்சம் கொஞ்சமாக மகிமைப்பட ஆரம்பித்தது.

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாலிபன்' ஊழியத்தின் 4ஆம் ஆண்டு நிறைவையொட்டி, நடாத்தப்படும்

# அகில இலங்கை
# வேதாகம கட்டுரைப் போட்டி – 2011




**a) பிரிவு – 1 (16 வயதிற்குட்பட்டவர்கள்)**
**தலைப்பு :** "இயேசப்பாவும் நானும்...."
**சொற்கள் :** 150க்கு மேற்படாமல்

**b) பிரிவு – 2 (17 வயதிலிருந்து 25 வயது வரை)**
**தலைப்பு :** "எனது வாழ்வு இயேசுவுக்கே..."
**சொற்கள் :** 250க்கு மேற்படாமல்

**c) பிரிவு – 3 (26 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும்)**
**தலைப்பு :** "கிறிஸ்தவ ஜீவியமும் சாட்சியும்...."
**சொற்கள் :** 300க்கு மேற்படாமல்

3 பிரிவினரும் தங்களது ஆக்கங்களை எழுதி 2011 நவம்பர் 30ம் திகதிக்கு முன்பாக தமது சபைப் போதகரின் அத்தாட்சிப்படுத்தலுடன்,

**ஆசிரியர், 'வாலிபன் ஊழியன்' மெதடிஸ்த திருச்சபை, கோட்டைமுனை.**

எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**1வது, 2வது, 3வது இடத்திற்கான சிறப்புப் பரிசில்கள் காத்திருக்கின்றன.**

**தேவையான விபரங்கள் :**

பெயர் :.......................................................................................
விலாசம் :.......................................................................................
சபை :.......................................................................................
தொ.பேசி இல. :.......................................................................................
மின்னஞ்சல் :.......................................................................................

**அனைவரும் ஒன்றுசேர்ந்து நமது மீட்பராகிய இயேசுகிறிஸ்துவை எமது தாலந்துகளினால் உயர்த்துவோம் வாரீர்!**

## மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம் - கோட்டைமுனை.

**கடிதத் தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்,**
**"வாலிபன்" சஞ்சிகை,**
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com

சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org